தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1). வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

விழுப்புரம் மின் திட்டம்.

*குறுகிய கால வினா எண் 15— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள விழுப்புரம் மின்சார வாரியத் திட்டத்தை இரண்டாக பிரிக்கும் உத்தேசம் உண்டா? ஆம் என்றால் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

தற்போது இல்லை.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, எப்போது என்று அறிவிப்பார்களா ? இந்த மின்சார வாரியத் திட்டத்தை இரண்டாகப் பிரிப்பதால் புதிதாக என்ஜினியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்களா ? அல்லது அதிகப் பட்சமாக செலவாகும் என் பதால் இல்லை என்று கூறுகிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின்சார வாரியத் தைப் பொறுத்தவரையில் விநியோகம் சம்பந்தமான பிரிவைச் சீர்திருத்துவதாக இருக்கிறோம். அத்தகைய சீர்திருத்தம் வருகிறபோது இத்தகைய திட்டங்களுக்கு வாய்ப்பு உண்டு.

திரு. சி. கோவிந்தராசன் : தென் ஆற்காடு மாவட்டத்தில், சவுத் ஆற்காடு ஸிஸ்டம் விழுப்புரத்தில் மையமாக இருப்ப தாலும், பல்வேறு பகுதிகள் அதன் கீழ் இருப்பதாலும் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற ஆலோசனை ஏற்கனவே டெவலப்மென்ட் கவுன்சிலில் கூட வந்திருக்கிறது. அப்படிச் செய்தால், திறமை அதிகரித்து, காலாகாலத்தில் காரியங்களைச் செய்ய உதவியாக இருக்கும். ஆகவே, அது குறித்து புனர் பரிசீலனை செய்து இரண்டாகப் பிரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திறமையை அதிகப் படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் விநியோகத் திட் டங்களைப் பற்றி மறு ஆய்வு செய்து வருகிறோம். அந்த சீர்திருத்தத்தை மேற்கொள்கிறபோது இதற்கான வாய்ப் புண்டு.

திரு. துரை முத்துசாமி : சீர்திருத்தக் கமிஷன் வரும்போது செய்வதாகச் சொன்னார்கள். அது எப்போது வரும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீர்திருத்தக் கமிஷன் அல்ல. நாமே செய்வதுதான்.

ஆசியன் பேரிங்குகள் நிறுவனம்.

*வினா எண் 420—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்றக் கூட்டுத் துறை நிறுவனம் ஜப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன் ஹோசூரில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், பலதரப்பட்ட பேரிங்குகள் தயாரிப்பதற்காக ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்ற நிறுவனத்தை திரு.பழனியப்ப செட்டியார் அவர்களுடன் கூட்டுத்துறையில் சுமார் 12 கோடி திட்ட மதிப்பில் தர்மபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகில் பாகலூர் கிராமத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : இந்த 12 கோடி ரூபாயில் அரசுத் துறை எவ்வளவு போடுகிறது? தனியார் எவ்வளவு போடு கிறார்கள்? பொதுவாக 50 கோடி ரூபாய் திட்டம் என்று சொன்னால் ரூ. 48 கோடி அரசு செலுத்தி இரண்டு கோடி ரூபாய் தனியார் செலுத்தி அவர்கள் இவ்வாறு கூட்டுத் துறையில் தலைமை தாங்குவதால்தான் சில சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, தனியார் துறை, கூட்டுத்துறை என்றில்லாது பொதுத் துறையில் இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்கு 1974-லேயே ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. கூட்டுத் துறை என்றால், அரசாங்கம் 26 சதவிகிதம், தனியார் 25 சதவிகிதம், ஆக 51 சதவிகிதம் போடுகிறார்கள். பப்ளிக் ஷேர்ஸ் 49 சத விகிதம்.